பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

06 03 2025 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. இந்தியா - ஜப்பான் இடையே திறன் மேம்பாட்டுத் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.
2. புதுமை கண்டுபிடிப்புகளின் மையமாக இந்தியாவை உருவாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.
3. இந்தியாவிற்கு உகந்த வகையிலான நடவடிக்கைகளை அமெரிக்கா அதிபர் திரு டொனால்டு ட்டிரம்ப் தலைமையிலான நிர்வாகம் மேற்கொண்டு வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்
4. கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் 20-ஆம் தேதி தொடங்கி 27-ஆம் தேதி வரை நடைபெறும் என மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.
5. ஆசிய மகளிர் கபடி சாம்பியன் போட்டி இன்று ஈரானில் தொடங்குகிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

ஜப்பான் - இந்தியா வர்த்தக ஒத்துழைப்புக் குழுவின் பிரதிநிதிகள் பிரதமர் திரு நரேந்திரமோடியை புதுதில்லியில் சந்தித்து பேசினர்.

அக்குழுவின் தலைவர் திரு **Tatsuo yasunaga** தலைமையிலான 17 பேர் கொண்ட இந்த குழுவில் ஜப்பான் நாட்டின் உற்பத்தி, வங்கி, விமான போக்குவரத்து, மருந்து உற்பத்தித்துறை உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த தலைவர்கள் இடம்பெற்றுள்ளனர்.

புதுதில்லியில் இன்று நடைபெறவுள்ள ஜப்பான் - இந்தியா வர்த்தக ஒத்துழைப்புக் குழுவின் கூட்டம் குறித்து பிரதமருடன் அவர்கள் விவாதித்னர்.

இந்தியாவில் குறைந்த செலவில் உற்பத்தி, உயர்தரம், சர்வதேச சந்தைகளுக்கான உற்பத்தி விரிவாக்கம் உள்ளிட்டவைக் குறித்தும் அக்குழுவினர் பிரதமருடன் ஆலோசனை நடத்தினர்.

அப்போது அவர்களுடன் உரையாடிய பிரதமர், இந்தியாவில் ஜப்பான் நாட்டின் வர்த்தகத்தை விரிவாக்கம் செய்வதற்காக பாராட்டு தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான இருதரப்பு உறவில் முக்கிய அம்சமாக விளங்கும் திறன் மேம்பாட்டுத் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் அவசியத்தையும் திரு நரேந்திரமோடி வலியுறுத்தினார்.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று உத்தராகண்ட் செல்கிறார்.

**Mukhwa** –வில் உள்ள மாதா கங்கா கோவிலில் பிரதமர் சிறப்பு தரிசனம் செய்கிறார்.

பின்னர், **Harsil** செல்லும் பிரதமர், மலையேற்றம் மற்றும் இருசக்கர வாகனப் பேரணியை தொடங்கி வைக்கிறார்.

உத்தராகண்ட் மாநில அரசு இந்த ஆண்டு குளிர்கால சுற்றுலாத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஆன்மிக சுற்றுலாவை ஊக்குவிக்கும் விதமாக, உத்தராகண்ட் அரசு இந்த முயற்சியை எடுத்துள்ளது.

உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், சுற்றுலா வர்த்தகத்தை ஊக்குவிக்கவும் இந்த திட்டம் பெரிதும் உதவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

உலகில் புதுமை கண்டுபிடிப்புகளின் மையமாக இந்தியாவை உருவாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.,

புதுமை கண்டுபிடிப்புகளில் முதலீடு குறித்த இணையவழி கருத்தரங்கில் உரையாற்றிய அவர், ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளுக்காக பட்ஜெட்டில் 20 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்.

உலகளாவிய புதுமை கண்டுபிடிப்புகள் குறியீட்டில் இடம்பெற்றுள்ள 133 நாடுகளில், இந்தியா 81-வது இடத்திலிருந்து 39-வது இடத்திற்கு முன்னேறியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த பத்து ஆண்டுகளில் புதுமை கண்டுபிடிப்புகளுக்கான காப்புரிமைகளின் எண்ணிக்கை 17 மடங்கு அதிகரித்துள்ளதாகவும் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்தார்.

[]<<<>>>[]

நாட்டின் சமூக பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடு இரட்டிப்பாக்கப் பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மனித வளத்தில் முதலீடு என்ற கருப்பொருளில் நடைபெற்ற இணையவழி கருத்தரங்கில் பேசிய அவர், மனித வளமே நாட்டின் சிறந்த சொத்து என்று கூறினார்.

நாடு முழுவதும் பத்து புதிய இ எஸ் ஐ சி மருத்துவக் கல்லூரிகளை தொடங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதகாவும், மேலும் பத்து கல்லூரிகளை தொடங்குவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்கும், அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கும் அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை அவர் எடுத்துரைத்தார்.

கடந்த பத்து ஆண்டுகளில் 17 கோடிக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கூறிய திருமன்சுக் மாண்டவியா, கடந்த ஆண்டு மட்டும் நான்கு கோடியே 60 லட்சம் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

இந்தியாவுக்கு உகந்த வகையிலான நடவடிக்கைகளை அமெரிக்கா அதிபர் திரு டொனால்டு ட்டிரம் தலைமையிலான நிர்வாகம் மேற்கொண்டு வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் பயணம் மேற்கொண்ட அவர், லண்டனில் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில், அமெரிக்காவின் வெளியுறவு கொள்கை மாற்றம் எதிர்பார்க்கப்பட்ட ஒன்று என்றும், அது இந்தியாவிற்கு பல்வேறு வகைகளில் பொருந்தக்கூடியது என்றும் தெரிவித்தார்.

அமெரிக்க நிர்வாகம் இந்தியாவுக்கு முன்னுரிமை அளித்து வருவதாக அவர் கூறினார்.

இந்தியா – அமெரிக்கா இடையே இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் குறித்து வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் வாஷிங்டனில விவாதிக்க உள்ளதாகவும் திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

தமது இங்கிலாந்து பயணத்தை முடித்துக் கொண்டு அயர்லாந்து சென்றுள்ள அவர் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு சைமன் ஹரீஸ் உள்ளிட்டோரை இன்று சந்தித்து பேச உள்ளார்.

அத்துடன் அங்கு வசிக்கும் இந்திய வம்சாவளியினரையும் திரு ஜெய்சங்கர் சந்திக்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

நடப்பு ஆண்டு கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகள் புதுதில்லியில் இம்மாதம் 20-ஆம் தேதி தொடங்கி 27-ஆம் தேதி வரை நடைபெறும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா அறிவித்துள்ளார்.

இதில் பல்வேறு நாடுகளின் பாரா விளையாட்டு வீரர்களும் கலந்து கொள்ள உள்ளதாக அவர் தெரிவித்தார்..

ஆறு பிரிவுகளில் நடைபெறும் இப்போட்டிகளில் சுமார் ஆயிரத்து 230 வீரர்கள் பங்கேற்க உள்ளதாக அவர் கூறினார்.

புதுதில்லி ஜவஹர்லால் நேரு மைதனத்தில் தடகளம், வில்வித்தை மற்றும் பளுதூக்கும் போட்டிகள் நடைபெற உள்ளதாகவும், இந்திராகாந்தி மைதானத்தில் பேட்மிண்டன், டேபுள் டென்னிஸ் போட்டிகள் நடைபெறவுள்ளதாகவும் திரு மன்சுக் மாண்டவியா தெரிவீத்தார்.

[]<<<>>>[]

விவசாயிகளின் போராட்டம் காரணமாக சண்டிகர் யூனியன் பிரதேசத்தின் அனைத்து எல்லைகளும் சீல் வைக்கப்பட்டுள்ளன.

காவல்துறையினர் தீவிர பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளதாக காவல்துறை கண்காணிப்பாளர் கீதாஞ்சலி கண்டேல்வால் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஒடிஸாவில் அனைத்து அரசு பள்ளிகளின் கட்டிடங்களுக்கும் ஒரே வர்ணம் பூசுவது என்று அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

அதன்படி பள்ளிக் கட்டிடங்களில் ஆரஞ்ச் வர்ணம் பூசப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒடிஸா அரசின் இந்த முடிவுக்கு எதிர்கட்சியான பிஜூ ஜனதாதளம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது மாநில அரசுக்கு தேவையற்ற செலவை ஏற்படுத்தும் என்றும் அக்கட்சி கூறியுள்ளது.

அதற்குப் பதிலாக தரமான கல்வி, ஆசிரியர்களை கூடுதலா நியமிப்பது உள்ளிட்டவற்றுக்கு அரசு செலவிடலாம் என்றும் பிஜூ ஜனதாதளம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

அருணாச்சல பிரதேச சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடர் இன்று ஆளுநர் உரையுடன் தொடங்குகிறது.

அருணாச்சல பிரதேச சரக்கு மற்றும் சேவை வரி திருத்த மசோதா உள்ளிட்ட நான்கு மசோதாக்கள் இந்த கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இம்மாதம் 12-ஆம் தேதி வரை ஐந்து நாட்கள் இக்கூட்டத்தொடர் நடைபெறும் என்ற அவர் மேலும் கூறுகிறார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீர் பொருளாதார ஆய்வறிக்கையை அம்மாநில முதலமைச்சர் திரு ஒமர் அப்துல்லா இன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்கிறார்.

ஜம்மு-கஷ்மீருக்கான பட்ஜெட் நாளை தாக்கல் செய்யப்பட உள்ள நிலையில், நிதித்துறைக்கு பொறுப்பு வகிக்கும் திரு ஒமர் அப்துல்லா நடப்பு நிதி ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையை சமர்ப்பிக்கிறார்.

**[]<<<>>>[]**

பீகார், சிக்கிம், மேற்குவங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் வடகிழக்குப் பகுதி மற்றும் விதர்பா பிராந்தியதில் அதிகபட்ச வெப்பநிலை இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக்கூடும் என்று அது கூறியுள்ளது.

தில்லி உள்ளிட்ட வடமேற்கு பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் மணிக்கு 25 கிலோமீட்டர் பலத்த தரைக்காற்று வீசக்கூடும் என்றும் தெரிவித்துள்ளது.

கேரளா மற்றும் மாகே பகுதிகளில் இன்று வறண்ட வானிலை நிலவும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஆசிய மகளிர் கபடி சாம்பியன் போட்டி இன்று ஈரானில் தொடங்குகிறது.

இந்தியா இன்று பங்ளாதேஷையும், தாய்லாந்தையும் எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணி இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

லாகூரில் நடைபெற்ற இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் அந்த அணி 50 ரன் வித்தியாசத்தில் தென்னாப்பிரிக்க அணியை வென்றது.

துபாயில் ஒன்பதாம் தேதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் நியுசிலாந்து - இந்தியாவை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

ஆர்லியன்ஸ் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர் 21-19, 21-14 என்ற செட் கணக்கில் ஜப்பானின் **koo takahashi** -யை வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோகன் கபூர் - ருத்விகா ஷிவானி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

முதல் சுற்றில் இந்த இணை 20-22, 24-22, 21-16 என்ற செட் கணக்கில் தைவான் இணையை வென்றது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஒடிஸா அணி 3-2 என்ற கோல் கணக்கில் ஜாம்ஷெட்பூர் அணியை வென்றது.

இன்று நடைபெறவுள்ள போட்டியில் ஹைதராபத் அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

***End of News***